# 2026 சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 13.4.2026 அன்று, விழுப்புரம், திருக்கோவிலூர், செஞ்சி, திண்டிவனம், செங்கல்பட்டு, ஆலந்தூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு :





● விழுப்புரம் நான்கு முனை சாலை சந்திப்பு பகுதியில், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் ஆர்.லட்சுமணன் அவர்களையும், வானூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் கௌதம் திராவிட மணி அவர்களையும் ஆதரித்து, பரப்புரை செய்தார்.



● திருக்கோவிலூர் பேருந்து நிலையம் அருகில், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அவர்களை ஆதரித்து, பரப்புரை மேற்கொண்டார்.







● செஞ்சி, விழுப்புரம் சாலை நான்கு முனை சந்திப்பு பகுதியில், செஞ்சி சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் அவர்களுக்கு, 'உதயசூரியன்' சின்னத்துக்கு வாக்குகள் சேகரித்தார்.



● மயிலம் திண்டிவனம் சாலை பகுதியில், மயிலம் சட்டமன்றத் தொகுதியின் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் வேட்பாளர் எல்.வெங்கடேசன் அவர்களுக்கு, கொட்டுமுரசு சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.





● திண்டிவனம், செஞ்சி சாலை பகுதியில், திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச்செயலாளர் வன்னி அரசு அவர்களுக்கு, பானை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.







● செங்கல்பட்டு, இராட்டினம் கிணறு பகுதியில், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி அவர்களை ஆதரித்து, பரப்புரை செய்தார்.



● ஆலந்தூர், அண்ணா சிலை பகுதியில், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

